**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2021**

**D011 பண்டைய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தலைவியின் அழகிற்கு உவமையாகக் கூறப்படும் பட்டினம் யாது?
2. குறி தவறாத வீரத்தலைவன் என நற்றிணையில் குறிப்பிடப்படுபவன் யார்?
3. வரைவு கடாவுதல் என்றால் என்ன?
4. நற்றிணையைத் தொகுப்பித்தவன் யார்?
5. பாலைத் திணையின் உரிப்பொருளைக் கூறுக.
6. குறுந்தொகையின் அடிவரையறையைக் கூறுக.
7. உடன்போக்கு என்றால் என்ன?
8. ஓரம்போகியாரை ஆதரித்த சேரமன்னன் யார்?
9. கைக்கோள் என்பதன் பொருள் என்ன?
10. அகநானூற்றின் மூன்று பிரிவுகளைக் குறிப்பிடுக.
11. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் யார்?
12. பெருஞ்சோறு என்றால் என்ன?
13. கிள்ளிவனின் உயிர் பிரிந்தது குறித்து நப்பசலையார் கூறியது என்ன?
14. வரைபோல் இஞ்சி– பொருள் தருக.
15. 'ஏம வாழ்க்கை' என்பதன் பொருள் யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தலைவனின் உயரிய பண்புகளாக நற்றிணையில் தலைவி கூறுவன யாவை?
2. அகவன் மகளே எனத்தொடங்கும் பாடலின் பொருட்சிறப்பைக் கூறுக.
3. கல்வியின் சிறப்புகளாக பாண்டியன் அறிவுடைநம்பி கூறுவனவற்றை எழுதுக.
4. ஐங்குறுநூற்றிலுள்ள மருதத்திணைப் பாடல்களில் வரும் உள்ளுறை உவமம் பற்றி எழுதுக.
5. அகநானூற்றில் வரும் முருகவழிபாடு பற்றிய செய்திகளைக் கூறுக.
6. சங்க காலத்தொழில்கள் குறித்து இயம்புக.
7. மதுரை நகரின் சிறப்புகளாக சிறுபாணாற்றுப்படை கூறுவன யாவை?
8. நலங்கிள்ளியின் பேராற்றலை இயம்புக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சங்கப்பாடல்களில் அகவாழ்வு பல்லுயிர் சூழல் பின்னணியில் விளக்கப்பட்டுள்ள சிறப்பினை விவரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) புறநானூற்றுப் பாடல்கள் வழி முதுபெண்டிர் வீரம் குறித்து கட்டுரைக்க.

2. (அ) அகநானூற்றுப் பாடல்களில் வெளிப்படும் எண்சுவைகளை விவரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றில் வரும் திணைமயக்கம் குறித்த செய்திகளை விளக்கியுரைக்க.

3. (அ) கடையேழு வள்ளல்களின் கொடைச்சிறப்பை விவரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்து காட்டும் சேரமன்னர்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

***